**கவனிக்க** .- 2015.03.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1908 - 2015 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2015.03.27

1908 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 656 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 661 |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 662 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 663 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## மத்துகம பிரதேச சபை

### மேல் மாகாண அரச சேவை வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளல்

மத்துகம பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவைக்கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் | ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | வேலைத்தள தொழிலாளர் | 2 | PL 1 (2006A) ரூ. 11,730-120×10-130×10-145×10-160×12 -ரூபா 17,600 (ரூ. 12,090 க்கு முன்னர் வினைதிறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.) | குறைந்தபட்சம் 8 ஆந் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் | |
| 2 | சுகாதார தொழிலாளர் | 1 | PL 1 (2006A) ரூ. 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 (ரூ. 12,090 க்கு முன்னர் வினைதிறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.) | கல்வி தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. | |

2. மத்துகம பிரதேச சபையில் ஏற்கனவே அமைய, பதிலீடு அல்லது செயற்றிட்ட அடிப்படையில் சேவை புரியும் ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

3. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது வருடங்கள் 18 இக்கு குறையாதும் 45 க்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

4. **வேறு தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பதாரி, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மேல் மாகாணத்தினுள் 3 வருடங்களுக்கு குறையாத காலம் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படுகின்ற கிராம அலுவலரின் சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்.)

(iv) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறுவனத்தினால் சேவையில் இருந்து நீக்கப்பட்ட ஒருவராக இருத்தலாகாது என்பதுடன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வுபெற்ற ஒருவராகவும் இருத்தலாகாது.

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது;

(vi) தேவைப்படுமானால் சபையினால் தீர்மானிக்கப்படும் பிணைக்காக, பணம் அல்லது காப்புறுதி சான்றிதழ் வைப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.

5. **பொது நிபந்தனைகள்** :-

(i) சிறந்த ஆளுமையுடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும் ;

(iii) இந்தப் பதவி மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்;

(iv) தகுதிகாண் காலத்தின் இறுதியில் நிரந்தரமாக்குதல் பற்றி கவனத்தில் கொள்ளப்படும் ;

(v) இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் தங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித்தகைமைகள் அல்லது வேறு தகைமைகள் போலியானது அல்லது உண்மையற்றது என நிரூபிக்கப்பட்டால் வேறு எந்தவொரு அறிவித்தலுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.-விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015.04.10 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மத்துகம" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். தாமதமாக கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமற் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்படமாட்டாது.

7. தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

8. விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்:-

(அ) பிறப்புச் சன்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) வதிவிடம் தொடர்பான பிரதேசச் செயலாளரின் சான்றிதழ்/வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதி;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒரு சான்றிதழ் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலரிடம் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)
(உ) தொழில்ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்;
(ஊ) ஏற்கனவே சேவை புரிவதற்குரிய திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.

9. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரங்கள் மத்துகம பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானதாகும்.

10. ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதியன்று காணப்படும் சகல வெற்றிடங்களும் நிரப்பப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதனால் மேற்குறிப்பிடப்படும் பதவிகளின் எண்ணிக்கை மாற்றியமைக்கப்படுவதற்கு இடமுண்டு.

அசோக்க ரணசிங்க,
தவிசாளர்,
மத்துகம பிரதேச சபை.

பிரதேச சபை,
மத்துகம,
2015, பெப்புருவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்துகம பிரதேச சபை**

**...................... பதவிக்கான விண்ணப்பம்**

1 விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.
முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. தபால் விலாசம் :-----.
3. பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
5. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.
6. இனம் :-----.
7. நீங்கள் இலங்கைப் பிரசையா? ஆம் என்றால் பரம்பரையினாலா அல்லது பதிவினாலா? என்பது பற்றி :-----.
8. கல்வித் தகைமைகள் :-----.
9. தொழில் ரீதியான தகைமைகள் :-----.
10. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிகின்றவர் என்றால் அது சம்பந்தமான விபரம் :-----.
(i) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.
(ii) இப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
(iii) அந்த நியமனத்தின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீடு/ஒப்பந்தம்) என்பது பற்றி) :-----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிகின்றேன். மேற்குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைந்துகொள்ள முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும், நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-792

---

**புளத்சிங்கள பிரதேச சபை**

மேல் மாகாணத்தின் புளத்சிங்கள பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க் காணும் பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தினுள் மூன்று (3) வருடங்கள் நிரந்தர வதிவிடமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புளத்சிங்கள பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வதியும் விண்ணப்பதாரர்கள் மற்றும் இந்த சபையில் ஏற்கனவே அமைய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | வருடாந்த சம்பளஅளவுத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1 | வேலைத்தள மேற்பார்வை யாளர் தரம் III | 01 | ரூபா 13,120-10×145-10×170-10×240-10×320-ரூபா 22,040 | சிங்கள மொழி/ தமிழ் மொழி/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் 2 பாடங்களுக்கு திறமைச் சித்திகள் அடங்கலாக ஒரே அமர்வில் 6 பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் கல்விப் பொது தராதரப் பத்திர (உ. த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடமாவது (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | அலுவலக வேலை உதவி யாளர் II | 02 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | கல்விப் பொது தராதரப் பத்திர (சா. த.) பரீட்சயில் ஒரே தடவையில் ஏதேனும் 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 3 | வேலைத்தள தொழி லாளர் III | 04 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்திபெற் றிருத்தல் வேண்டும். |
| 4 | சுகாதார தொழி லாளர் III | 01 | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | கல்வித் தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. |

**2. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2015.04.06 ஆந் திகதிக்கு மேற்பார்வையாளர் பதவிகளுக்காக 18 வருடங்களுக்கு குறையாதும் 30 வருடங்களுக்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும்.

(ii) ஏனைய பதவிகளுக்காக 18 வயதுக்கு குறையாதும் 45 வயதுக்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.);

(iii) விண்ணப்பதாரிகள் பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் 3 வருடங்களுக்கு குறையாத காலம் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படுகின்ற கிராம அலுவலரின் சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும் ;

(v) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(vi) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது ;

(vii) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 5 வருடங்களுள் குற்றமொன்றுக்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை வழங்கப்படாதவராகவும் இக்காலத்தினுள் உரிய சகல சம்பள படியேற்றங்களையும் உழைத்தவராகவும் மகிழ்ச்சிகரமான சேவைக் காலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் கொண்டதுமாகும். 3 வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்;

(ii) விதவைகள் அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(iii) இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக்குறிப்புகளுக்கும் அரச அல்லது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படுகின்ற கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு செயற்படுவதற்கும் நியமனதாரர் உடன்பட வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு முறை :**

(i) வேலைக்கள மேற்பார்வையாளர் பதவிக்கு எழுத்துமூல பரீட்சையின் பெறுபேற்றின் முன்னுரிமைக்கமைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசோதிக்கப்படும்.

* வேலைத்தள மேற்பார்வையாளர் பதவிக்கான எழுத்துமூல பரீட்சை, உளச்சார்பு, நுண்ணறிவு தற்கால சம்பவங்கள் பற்றிய பொது கிரகித்தல் ஆகியவை அடங்கும் இரு (2) வினாத்தாள்களினாலானது.

(ii) ஏனைய பதவிகள் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

(iii) விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) வதிவிடம் தொடர்பான பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் ;
(உ) தொழில் ரீதியான அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ்.

(iv) அடிப்படைக் கல்வித் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் எழுத்துமூல பரீட்சைக்காக/நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

5. விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015.04.06 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில், "செயலாளர், பிரதேச சபை-புளத்சிங்கள" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும் முழு அதிகாரமும் புளத்சிங்கள பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானது.

ரீ. எம். சியபலாகொட,
செயலாளர்,
புளத்சிங்கள பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புளத்சிங்கள,
2015, மாச்சு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**புளத்சிங்கள பிரதேச சபை**

.................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
2. முதலெழுத்தினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
3. தபால் விலாசம்:-----.

4. தொலைபேசி இல. :-----.

5. பிறந்த திகதி :----.

ஆண்டு :-----. மாதம் :-----, திகதி :-----.

2015.04.06 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. ஆண்/பெண் :----.

7. திருமாணமானவர்/திருமணமாகாதவர் :-----.

8. இனம் :-----.

9. இலங்கைப் பிரசையா? ஆம் என்றால் பரம்பரையினாலா? பதிவினாலா? :-----.

10. கல்வித் தகைமைகள் :-----.

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

11. நீங்கள் ஏற்கனவே புளத்சிங்கள பிரதேச சபையில் சேவை புரிபவர் என்றால் அது சம்பந்தமான விபரம் :-----.

(i) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.

(ii) சேவைக்காலம் :-----.

(iii) அந்த நியமனம் நிரந்தர/தற்காலிக/அமைய என்பது பற்றி :-----.

12. அனுபவமும் தொழில் ரீதியான தகைமைகளும் :-----.

இந்த விண்ணபத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிகிறேன். மேற்குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துகொள்ள முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

**ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் கடமை புரிகின்ற விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ..................................... அவர்கள் ஏற்கனவே இந்த நிறுவனத்தில்/திணைக்களத்தில் (நிரந்தர/அமைய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில்) ................................ ஆந் திகதி தொடக்கம் ..................................... என்பவராக சேவை புரிகின்றார். இந்த பதவிக்காக இவர் தெரிவுசெய்யப்பட்டால், இவரை இந்த நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. இவர் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கை மூலமும் தண்டிக்கப்படாதவர் (எச்சரிக்கை தவிர்ந்த) எனவும் உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-----,
திணைகக்ளத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம் :-----.
(பதவி முத்திரை இடவும்.)
திகதி :-----.

3-831

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## ஹட்டன் - டிக்கோயா நகர சபை

ஹட்டன் பொதுச் சந்தை பிரதேசத்தில் கடையறை அமைப்பதற்கான இடப்பரப்பினை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி பத்திர அறிவித்தல்

ஹட்டன் டிக்கோயா நகர சபைக்குச் சொந்தமான ஹட்டன் பொதுச் சந்தைப் பிரதேசத்தில் 16 கடையறைகளை அமைப்பதற்கான இடப்பரப்பினை குத்தகை அடிப்படையில் வழங்க சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடையறைகள் நகர சபையினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய அமைக்கப்பட்டு அவை நகர சபைக்கு மீண்டும் கையளிக்கப்பட வேண்டும். இதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2015.04.21 ஆந் திகதி மு. ப. 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 2. | கேள்விப்பத்திர விண்ணப்பம் | : 2015.04.20 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக விண்ணப்பப்படிவ கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 3. | மீளச் செலுத்தப்படாத கேள்விப் பத்திர விண்ணப்பப்படிவ கட்டணம் | : ரூபா 5,000 + வட் வரி மற்றும் NBT வரி |
| 4. | கேள்விப்பத்திரத் தொகை | : ரூபா 2,50,000 + வட் வரி மற்றும் NBT வரி தொகைக்கு கூடிய தொகையினை குறிப்பிடுபவர்களின் வேண்டுகோள் பரிசீலிக்கப்படும். |
| 5. | மீளச் செலுத்தப்படும் கேள்விப் பத்திர வைப்புப் பணம் | : ரூபா 20,000 |
| 6. | கடையறையின் அளவு | : 100 சதுர அடி |
| 7. | கடையறைகளைப் பார்வையிடல் | : வார நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். |
| 8. | மாதாந்த வாடகை தொகை | : அரசாங்க விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்படும் குத்தகை அறவிடப்படும். |
| 9. | குத்தகைக் காலம் | : நீண்டகால அடிப்படையில் குத்தகை வழங்கப்படும். |
| 10. | கேள்விகள் திறத்தல் | : 2015.04.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும். |

11. சகல கேள்வி பத்திரங்களையும் மூலப் பிரதி, இணைப் பிரதி என்று இரண்டு பிரதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஹட்டன் பொதுச் சந்தைப் பிரதேசத்தில் கடையறை அமைத்தலுக்கான இடப்பரப்பினை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்" எனக் குறிப்பிட்டு "தலைவர், ஹட்டன்-டிக்கோயா நகர சபை, ஹட்டன்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது இச்சபையின் கேள்வி மனு பெட்டியில் இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

12. கேள்விப்பத்திரக் குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானம் ஆகும்.

13. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் முழுத்தொகையினையும் கேள்வி திறக்கப்படும் தினத்தில் செலுத்துதல் வேண்டும்.

14. மேலதிக விபரங்களை சபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 051-2222275, 051-2222276.

அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹட்டன்-டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹட்டன்-டிக்கோயா,
2015, மாச்சு 4.

3-664

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹரிஸ்பத்துவ பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின்படி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக்கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லை எனின், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(3) ஆவது பிரிவின்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*எச். ஏ. ஆனந்த ஜயலிவால்,*
*தவிசாளர்,*
*ஹாரிஸ்பத்து - பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஹரிஸ்பத்து,*
*2015, பெப்புருவரி 10.*

*அட்டவணை*

*பாதையின் பெயர் : மஹகும்புர கலகாவ பாதை*
*ஆரம்பம் : மஹகும்புர பழைய அம்பலத்தின் அருகில்*
*முடிவு : சிங்ஹ சிரமதான மாவத்தை*

| *இடதுபுற எல்லைகள்* | *வலதுபுற எல்லைகள்* | *நீளம் (அடி)* | *அகலம் (அடி)* |
|---|---|---|---|
| அஸ்கிரிய மகா விகாரைக்குச் சொந்தமான பொகலவெல மஹகும்புரவெல காணி | டி. எல். சுரேஷ் இந்திக்கவுக்குச் சொந்தமான மொஹொட்டிகெதர வத்த | | |
| எச். எம். விஜேரத்னவுக்குச் சொந்தமான தம்பகஹகும்புர | ஜீ. டபிள்யூ. விஜிதா குமாரிக்குச் சொந்தமான கலஹிற்றியான ஹேன | | |
| எஸ். பி. விஜேரத்னவுக்குச் சொந்தமான கலஹிற்றியாவ கும்புர | கொண்டதெனிய விகாரைக்குச் சொந்தமான அட்டுகெதரவத்த | 1550 | 10 |
| பி. ஜீ. ஞானவதிக்குச் சொந்தமான தம்பகஹகும்புர | டி. ஜீ. ஷீலா சந்திரலதாவுக்குச் சொந்தமான மொஹொட்டிகெதர வத்த | | |
| ஜீ. கே. திசாசேகரவுக்குச் சொந்தமான கலஹிற்றியாவ கும்புர | டபிள்யூ. எம். எம். கே. திலகரத்னவுக்குச் சொந்தமான தொரகடலியத்த | | |
| பீ. டபிள்யூ. பண்டாரநாயக்கவுக்குச் சொந்தமான தம்பகஹகும்புர | டபிள்யூ. எம். எம். கே. திலகரத்னவுக்குச் சொந்தமான தொரகடவெல | | |

*3- 666*

**கொபேகனே பிரதேச சபை**

பாதைகளுக்கு பெயரிடல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் கௌரவ முதல் அமைச்சர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெயரிடப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எச். ஏ. யு. தம்மிக ஹெட்டிஆரச்சி,
தவிசாளர்,
கொபேகனே பிரதேச சபை.

**அட்டவணை**

| பாவனையில் இருந்த பெயர் | உத்தேசிக்கப்பட்டுள்ள பெயர் | சபையின் தீர்மானம் |
|---|---|---|
| 1. கும்புக்வெவ சந்தியில் இருந்து கலட்ட பெந்திவெவ வயல்வெளி வரையான பாதை | சனச மாவத்தை | 2014.08.28 ஆந் திகதி (04) XXVI இலக்க தீர்மானம் |
| 2. மொரகஹவெவ எஹெட்டுவெவ பாதை | அதிபர் கே. ஏ. எஸ். கஸ்தூரிரத்ன மாவத்தை | 2014.08.28 ஆந் திகதி (04) XXIV ஆம் இலக்க தீர்மானம் |

*3-765*

---

# நானாவித அறிவித்தல்கள்

**நிந்தவூர் பிரதேச சபை**

ஆதனவரி அறவிடல் - 2015

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 146 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி நிந்தவூர் பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 1 தொடக்கம் 25 வரையான கிராம அலுவலர் பிரிவுகளில் அமையப்பெற்ற அனைத்து அசையா சொத்துக்களுக்கும் 2014 ஆம் வருடத்தற்கு அறவிட்ட வரிப்பெறுமதியை 2015 ஆம் வருடத்திற்கும் வருடாந்த பெறுமதியில் 7% வீத தொகையை விதித்து அறவிடவும், 2015.02.19 ஆந் திகதி இடம்பெற்ற கௌரவ உறுப்பினர்களுக்கான மாதாந்த அமர்வின் 421 ஆவது தீர்மானமாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் மேற்படி சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள தத்துவங்களை கொண்டு வருடாந்த வரியை முழுமையாகவோ அல்லது ஒழுங்குமுறைப்படி 2015, மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களிலோ அல்லது அதற்கு முன்னரோ சமமான நான்கு தவணைகளாக நிந்தவூர் பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என நிந்தவூர் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எம். ஏ. எம். தாஹிர்,
தவிசாளர்,
நிந்தவூர் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நிந்தவூர்
2015, மாச்சு 02.

*3-742/1*

**நிந்தவூர் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளின் கீழ் நிந்தவூர் பிரதேச சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின்படி 2015 ஆம் ஆண்டில் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் அட்டவணைகளில் விபரிக்கப்படும் வியாபாரங்களிலிருந்து உரிமைக் கட்டணமும் அல்லது வரியும் விளம்பரக் கட்டணமும் நிந்தவூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 2014 ஆம் ஆண்டில் அறவிட்ட பெறுமதியை 2015 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடமும் ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முதல் செலுத்தப்பட வேண்டும் என்றும் நிந்தவூர் பிரதேச சபையின் 2015.02.19 ஆந் திகதி 420 ஆம் இலக்க சபையின் தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

எம். ஏ. எம். தாஹிர்,
தவிசாளர்,
நிந்தவூர் பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
நிந்தவூர்,
2015, மார்ச்சு 02.*

***அட்டவணை 1***

*உரிமக் கட்டணங்கள் - (149 ஆம் பிரிவு)*

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | வியாபாரங்களின் தன்மை | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 க்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இருந்து ரூபா 1,500 வரை | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 இற்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1 | தேநீர்க் கடை வைத்து நடாத்தல் தரம் "ஏ" | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 2 | தேநீர்க் கடை வைத்து நடாத்தல் தரம் "பீ" | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3 | தேநீர்க் கடை வைத்து நடாத்தல் தரம் "சீ" | 300 0 | 400 0 | 500 0 |
| 4 | சாப்பாட்டுக்கடை வைத்து நடாத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 5 | தேநீர்க் கடையும், சாப்பாட்டுக் கடையும் வைத்து நடாத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 6 | பேக்கரியை வைத்து நடாத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 7 | முடிவெட்டும் இடத்தை வைத்து நடாத்தல் தரம் "ஏ" | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | முடிவெட்டும் இடத்தை வைத்து நடாத்தல் தரம் "பீ" | 250 0 | 500 0 | 750 0 |
| 9 | சலவை கடை வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10 | பீடி தயாரிக்கும் நிலையம் வைத்து நடாத்தல் | 250 0 | 500 0 | 750 0 |
| 11 | மாட்டிறைச்சிக் கடை வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | ஆட்டிறைச்சிக் கடை வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13 | கோழி இறைச்சிக்கடை வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் வைத்து நடாத்தல் | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 15 | கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் கிளை வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16 | சில்லறை கடை வைத்து நடாத்தல் தரம் "ஏ" | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 17 | சில்லறை கடை வைத்து நடாத்தல் தரம் "பீ" | 250 0 | 500 0 | 750 0 |
| 18 | சில்லறை கடை வைத்து நடாத்தல் தரம் "சீ" | 300 0 | 400 0 | 500 0 |
| 19 | அழகு சாதனம் விற்பனை நிலையம் வைத்து நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20 | புதினப் பத்திரிகை, சஞ்சிகைகள் விற்பனை செய்யுமிடம் | 250 0 | 500 0 | 750 0 |
| 21 | குளிர்பானக் கடை வைத்து நடாத்தல் | 250 0 | 500 0 | 750 0 |
| 22 | கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்து நடாத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 23 | 20 பொதிக்கு மேல் சீமெந்து வைத்திருத்தல்/விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24 | மரக் காலை அல்லது மரக் கடை வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 25 | தச்சுத் தொழிற்சாலை வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 26 | வீட்டுத் தளபாடம் வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்யும் இடம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |

| தொடர் இலக்கம் | நிரல் I<br>வியாபாரங்களின் தன்மை | நிரல் II<br>வருடாந்த மதிப்பீடு ரூபா 750 க்கு மேற்படாத விடத்து<br>ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இருந்து ரூபா 1,500 வரை<br>ரூபா ச. | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 இற்கு மேல்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| 27 | விறகு சாலை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28 | சோடா விற்பனை முகவர் நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 29 | மிட்டாய், டொபி செய்யும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30 | பழ வகை விற்றல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31 | தேங்காய் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32 | ஆபரணங்கள் தயாரித்தல்/பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33 | துவிச்சக்கர வண்டி திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34 | நடமாடும் வாகனங்களில் உணவுப் பண்டங்களை விற்பனை செய்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 35 | துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36 | புதிய துவிச்சக்கர வண்டி விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 37 | மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 38 | மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகம் விற்பனை நிலையம் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 39 | மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 40 | பழைய இரும்பு பொருட்கள், சாக்குகள், வெற்றுப்போத்தல்கள் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 41 | பழைய டயர்கள் சேகரிக்கும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 42 | டயர், ரியூப்களை வல்கனைஸ் செய்யும் ஸ்தாபனம் நடாத்துதல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 43 | மின்சாரப் பொருட்கள் திருத்தும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 44 | மரம் அறுக்கும் ஆலை | 1,000 0 | 1,500 0 | 2000 0 |
| 45 | கொல் உலையும், பட்டறையும் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46 | சாதாரண கொல் உலை வைத்திருத்தல் | 300 0 | 400 0 | 500 0 |
| 47 | ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 48 | கயிறு உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49 | கருவாடு பதனிடும் வாடி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50 | வெல்டிங் கராஜ் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 51 | லேத் இயந்திர சாதனம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 52 | ஸ்பிறே பெயின்றிங் பண்ணும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53 | பற்றரிகளை சார்ஜ் பண்ணும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54 | குசன் பண்ணும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 55 | தொலைக்காட்சி பெட்டி, வானொலிப் பெட்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 56 | கடிகாரங்கள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 250 0 | 500 0 | 750 0 |
| 57 | வாகனங்களுக்கான டயர் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 58 | பெற்றோல், டீசல் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 59 | வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம் வைத்திருத்தல் | 3,500 0 | 4,500 0 | 5,000 0 |
| 60 | தனியார் வைத்தியசாலை வைத்திருத்தல் | - | - | 20,000 0 |
| 61 | தனியார் வைத்திய ஆலோசனை நிலையம் | 2,000 0 | 3,000 0 | 5,000 0 |
| 62 | தனியார் மருந்து விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 63 | தனிப்பட்ட சுதேசிய வைத்திய ஆலோசனை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64 | தனிப்பட்ட சுதேசிய வைத்தியசாலை வைத்திருத்தல் | 2,000 0 | 2,500 0 | 3,000 0 |
| 65 | ஆயுள்வேத மருந்து விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 66 | புடவை விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 67 | புடவைக் கைத்தறி நிலையம் வைத்திருத்தல் | 250 0 | 500 0 | 750 0 |
| 68 | விவசாய இரசாயன பொருட்கள் வைத்திருத்தல்/விற்பனை செய்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |

| | நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | வியாபாரங்களின் தன்மை | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 க்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இருந்து ரூபா 1,500 வரை | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 இற்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 69 | பாதணி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70 | தோல் பொருட்கள் விற்குமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71 | ஆடம்பரப் பொருடகள் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 72 | 100 கோழிகளுக்கு மேல் பண்ணை வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 73 | கண்ணாடிக்கடை | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 74 | புகைப்படம் எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 75 | தொலைக்காட்சி வீடியோ, கெசட்டுக்கள் வாடகைக்கு விடும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 76 | தொடர்பாடல் நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 77 | புத்தகங்கள், காகிதாதிகள் அலுவலக உபகரணங்கள் விற்பனை செய்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 78 | மீன்பிடி வலைகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 79 | ஒலிபெருக்கி வாடகைக்கு விடும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 80 | அங்காடி வியாபாரம் செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 81 | கொங்றீட் கல் உற்பத்தி செய்யும் இடம் வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 82 | கொங்றீட் கம்பம், பூச்சட்டி, கொட்டு உற்பத்தி செய்யும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 83 | வாகனங்கள் சேவிஸ் செய்யுமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 84 | அரிசி ஆலை வைத்திருத்தல் தரம் "ஏ" | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 85 | அரிசி ஆலை வைத்திருத்தல் தரம் "பீ" | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 86 | இயந்திரம் மூலம் மிளகாய் அரைக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 87 | கோழித்தீன் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 88 | தானியங்கள் வியாபார நிலையம் வைத்திருத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 89 | செங்கல் உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 90 | அச்சகம் வைத்து நடாத்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 91 | "கேஸ்" விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 92 | வாகனம் திருத்துமிடம் வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 93 | சுவிப் டிக்கட் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 94 | கணினி, கையடக்கத் தொலைபேசி திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 95 | கணினி இயந்திரம் விற்பனை நிலையம் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 96 | கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 97 | முச்சக்கர வண்டி திருத்துமிடம் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 98 | முச்சக்கர வண்டி உதிரிப்பாகம் விற்பனை செய்யும் நிலையம் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 99 | நன்னீர், உவர் நீர், மீன் மொத்த வியாபார நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 100 | கூடாரம், டியூப் லைட், கதிரை, சமையல் உபகரணம் வாடகைக்கு விடல் | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 101 | தனியார் கல்வி நிலையம், பயிற்சி நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 102 | தனியார் பாடசாலைகள் | 3,500 0 | 4,500 0 | 5,000 0 |
| 103 | டேஸ்ட் கடை (கடலை, கிழங்கு, பொறியல், மிக்ஸர்) | 250 0 | 500 0 | 1,000 0 |
| 104 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 105 | போக்குவரத்து முகவர் அல்லது ஆசனப் பதிவு | 500 0 | 1,000 0 | 1,500 0 |
| 106 | ஆடை தைக்கும் நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 107 | தொலைத் தொடர்பு கோபுரம் | - | - | 30,000 0 |
| 108 | அடகு பிடிக்கும் தொழில் நிலையம் | - | - | 5,000 0 |
| 109 | வங்கி நடவடிக்கை/நிதி நிலையம் வைத்து நடாத்துதல் | - | - | 5,000 0 |
| 110 | ஏல விற்பனை செய்தல் | - | - | 3,500 0 |
| 111 | நகைக் கடை வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 112 | உராய்வு எண்ணெய் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 113 | ஓடருக்கு சாப்பாடு சமைத்து விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | வியாபாரங்களின் தன்மை | வருடாந்த மதிப்பீடு ரூபா 750 க்கு மேற்படாத விடத்து | வருடாந்த மதிப்பீடு ரூபா 751 இருந்து ரூபா 1,500 வரை | வருடாந்த மதிப்பீடு ரூபா 1,500 இற்கு மேல் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 114 | பால் பண்ணை (25 மாட்டிற்கு மேல்) வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 115 | வேளாண்மை அறுவடை இயந்திரம் ஒன்றை பேணுதல் (பெரியது) | - | - | 3,000 0 |
| 116 | வேளாண்மை அறுவடை இயந்திரம் ஒன்றை பேணுதல் (சிறியது) | - | - | 2,000 0 |
| 117 | மண்டபங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடல் | 3,500 0 | 4,500 0 | 5,000 0 |
| 118 | நீர்/பானங்களை பொதி செய்து விற்பனை செய்யும் நிலையம் | 3,500 0 | 4,500 0 | 5,000 0 |
| 119 | மேசன்மார் சேவை வழங்கல்/தொழில் வழங்கும் முகவர் அமைப்பு | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 120 | உழவு இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையம் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 121 | நெல் விற்பனை செய்யும் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 122 | சிக்கரட் மொத்த விற்பனை நிலையம் வைத்து நடாத்தல் | 1,500 0 | 2,000 0 | 2,500 0 |
| 123 | வெளிநாட்டுப் பொதிகள் இறக்கி விநியோகித்தல் | - | - | 5,000 0 |
| 124 | உல்லாசப் பயணிகள் விடுதி வைத்திருத்தல் | - | - | 5,000 0 |
| 125 | வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை செய்யும் நிலையம் | - | - | 3,000 0 |
| 126 | காப்புறுதி நிலையம் ஒன்றினை பேணுதல் | - | - | 3,000 0 |
| 127 | படவரைஞர் | - | - | 2,000 0 |
| 128 | மின்சார உபகரணங்கள் விற்பனை செய்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 129 | உழவு இயந்திரம் மோட்டார் வாகனம் விற்பனை செய்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 130 | வாகனங்களை வாடகைக்கு விடல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 131 | மரக்கறி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 132 | விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 133 | பற்பொடி உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 134 | தும்பு மிட்டாய் உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 135 | பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கி விற்பனை செய்தல் | 2,000 0 | 2,500 0 | 3,000 0 |
| 136 | சர்பத் கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 137 | தங்குமிடம் வாடகைக்கு விடல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 138 | அலுவலக உபகரணங்கள் விற்பனை செய்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 139 | கட்டுமான ஒப்பந்த வேலை செய்தல் | - | - | 3,500 0 |
| 140 | வினோதப் பொருட்கள் விற்பனை செய்தல் | 750 0 | 1,000 0 | 1,500 0 |
| 141 | சாரதி பயிற்சி நிலையம் | - | - | 1,500 0 |

**2 ஆம் அட்டவணை (வியாபாரக் கட்டணம்)**

(அ) வியாபாரப் பட்டியல் :

1. தீர்மான வேலைகள், ஒப்பந்தக்காரர்.
2. பணம் கடன் கொடுப்போர்.
3. தரகர்கள் கூலியான தரகர்கள்.
4. மோட்டார் வாகனங்கள் ஓட்டப் பயிற்றும் ஸ்தாபனத்தை வைத்திருத்தல்.
5. ஏல விற்பனையாளர்.
6. மினி வீடியோ சினிமா காண்பித்தல்.
7. நன்றாக இயங்கும் போக்குவரத்துச் சேவை.
8. நகை வியாபாரம்.

(அ) வியாபார வரியின் பட்டியல் :

| சென்ற வருட வியாபாரத்தின் எடுப்பனவுகள் | வரிக் கொடுப்பனவுகள் ரூபா ச. |
|---|---|
| 1. ரூபா 6,000 இற்கு மேற்படாத பெறுவனவுகள் | வரி இல்லை |
| 2. ரூபா 6,001 இலிருந்து ரூபா 12,000 வரை | 200 0 |
| 3. ரூபா 12,001 இலிருந்து ரூபா 18,000 வரை | 300 0 |
| 4. ரூபா 18,001 இலிருந்து ரூபா 75,000 வரை | 600 0 |
| 5. ரூபா 75,001 இலிருந்து ரூபா 1,50,000 வரை | 1,500 0 |
| 6. ரூபா 1,50,001 இற்கு மேல் | 3,500 0 |

**3 ஆம் அட்டவணை**

**விளம்பரத்துக்கான கட்டண விபரம்**

| | விபரம் | பரப்பு | கால எல்லை | |
|---|---|---|---|---|
| | | | ஒரு மாதம் ரூபா ச. | ஒரு வருடம் ரூபா ச. |
| 1 | 200 சதுர அடிக்கு மேற்பட்ட விளம்பர பதாதைகள் | 1 சதுர அடி | 30 0 | 50 0 |
| 2 | 200 சதுர அடிக்கு குறைந்த விளம்பர பதாதைகள் | 1 சதுர அடி | 20 0 | 30 0 |
| 3 | எடுத்துச் செல்லக்கூடியதான/வாகனம் ஒன்றில் பொருத்தி இருக்கும் வியாபார அறிவித்தல் மற்றும் பெனர்கள் | 1 சதுர அடி | 50 0 | - |
| 4 | சுவர் ஒன்றில் வரையப்பட்ட விளம்பரங்கள் | 1 சதுர அடி | 30 0 | 50 0 |
| 5 | கொடி விளம்பரம் | 1 சதுர அடி | 25 0 | 40 0 |
| 6 | ஒளியூட்டப்பட்ட விளம்பரப் (பலகை) | 1 சதுர அடி | 50 0 | 80 0 |
| 7 | ஒளியூட்டப்படாத விளம்பரப் (பலகை) | 1 சதுர அடி | 30 0 | 50 0 |
| 8 | சுவர்களில் பொருத்தப்பட்ட விளம்பரப் (பலகை) | 1 சதுர அடி | 30 0 | 50 0 |

3-742/2

---

**மண்முனைபற்று பிரதேச சபை**

வாகனம் மற்றும் விலங்கு தொடர்பான வரி விதித்தல் - 2015

மண்முனைபற்றுப் பிரதேச சபை 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 293 ஆம் இலக்கம் கொண்ட பிரேரணை நிறைவேற்றியுள்ளது என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
தவிசாளர்,
மண்முனைபற்று பிரதேச சபை.

மண்முனைபற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
2014, திசெம்பர் 31.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 (1) ஆவது உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆவது பிரிவின் மற்றும் 4 ஆவது உப பகுதியிலே உள்ள நியதிகளின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மண்முனைபற்று பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் பின்வரும் அட்டவணை நிரல் I தரப்பட்டுள்ள வாகனம் அல்லது அமைந்துள்ள விலங்கை தன்வசம் வைத்திருக்கும் ஒருவர் மீது நிரல் II குறிப்பிடப்பட்டுள்ள வரி ஒன்றை 2015 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவது என மண்முனைபற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | *ரூபா ச.* |
| மோட்டார் வாகனம், மோட்டார் ட்ரைகார், மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள் வண்டில், ஜின் ரிக்ஷோ அல்லது ட்ரைசிக்கிள் அல்லாத ஒவ்வொரு வாகனத்திற்கும், ட்ரைசிக்கிள் அல்லாத பைசிக்கிள், பைசிக்கிள் கார் அல்லது பைசிக்கிள் வண்டிலுக்கு | 25 0 |
| (அ) வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 18 0 |
| (ஆ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 4 0 |
| ஒவ்வொரு மாட்டு வண்டிலுக்கும் | 20 0 |
| ஒவ்வொரு கைவண்டிக்கும் | 10 0 |
| ஒவ்வொரு யானைக்கும் | 50 0 |

*3-805*

---

**மண்முனைபற்று பிரதேச சபை**

ஏதேனும் கைத்தொழிலை, வியாபாரத்தை பேணி வருவதற்கான துணை விதிகளின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் மீது கட்டணம் விதித்தல்

மண்முனைபற்று பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய சபை தீர்மான இலக்கம் 2014 - 290 இன் பிரகாரம் கீழே காட்டப்பட்டிருக்கும் தீர்மானம் சபையில் நிறைவேற்றியுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

